மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# பண்டைத் தமிழ் இலக்கியம் வரையறுத்த பெரியோரும் சிறியோரும்

# The 'Periyor' and 'Siriyor' Terms Defined by Ancient Tamil Literature

சரண் சுக்லாம் ஆத்மலிங்கம்/ Sharan Suklam Ahtma Lingam[1]
மேகலாதேவி வரதராஜன்/ Megaladevi Varathrajan[1]
மனோன்மணி தேவி அண்ணாமலை/ Manonmani Devi M.A.R Annamalai[2]
[1] M. Ed Scholar, Faculty of Languages and Communication, Sultan Idris Education University
[2] Associate Professor, Faculty of Languages and Communication, Sultan Idris Education University
Corresponding Email: sharansuklam@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

எல்லாத் தமிழ்ச்சொற்களும் பொருள் குறிப்பதோடு அதன் தன்மையையும் விளக்குகின்றது என்பதை தொல்காப்பிய நூற்பாக்களின் வழி அறிய முடிகின்றது. அதுபோல, நமது தமிழ்மொழிப் புழக்கத்தில் பன்னெடுங்காலமாக இருந்துவரும் சொற்களான சிறியோர், பெரியோர் எனும் சொற்களின் உண்மைப் பொருளையும் அதனை இலக்கியம் பண்டைக் காலம் தொடங்கி வரையறுத்த தன்மைகளையும் இக்கட்டுரை விளக்கியுள்ளது. பெரியோர் என்பதற்கான இரு வேறு வகைப் பொருள்களும் சிறியோர் எனும் சொல்லுக்கான பல்பொருள்களும் இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது. நூலக ஆய்வாகத் தேவைக்கான தரவுகள் யாவும் பண்டைத் தமிழ் இலக்கிய நூல்களில் இடம்பெற்ற பாடல்களின் வழி ஆராயப்பட்டன. தொல்காப்பியம் தொடங்கி நறுந்தொகை வரை ஏழு வகையான இலக்கிய நூல்களிலிலிருந்து பெரியோர், சிறியோர் ஆகிய சொற்கள் இடம்பெறும் பாடல்கள் கண்டறியப்பட்டன. சேகரித்த தரவுகளை விளக்கமுறையில் பகுப்பாய்வு செய்து பண்டைக்காலம் உணர்த்தும் பெரியோர், சிறியோரின் சொற்பொருள்களையும் அதற்கான தன்மைகளையும் இந்த ஆய்வின் கண்டுபிடிப்புகளாக வழங்கப்பட்டுள்ளன. பெரியோரெனப்படுபவர், ஒழுகலாற்றிலும் பெருமையிலும் நற்குணங்களிலும் நல்ல மனத்திலும் பண்பிலும் கல்வியிலும் பிழை பொறுக்கும் திறத்திலும் உயர்ந்திருப்பவர் மட்டுமே. இத்தகைய தன்மைகளில் சற்றும் குறைந்தோர் சிறியோராகக் காணப்படுகிறார்.

**கருச்சொற்கள்:** பெரியோர், சிறியோர், பண்டைத் தமிழ் இலக்கியம்

**Abstract**

All Tamil words indicate meaning and also explain its nature. This has been explained clearly in Tholkappiyam Noorpa. Similarly, this article has explained the true meaning of the words 'Siriyor' and 'Periyor', which have been in our Tamil language since ages, and the characteristics that have been defined by our literatures since ancient times. Two different meanings of 'Periyor' and a few different meanings of 'Siriyor' has been explained in this article. All the data required for bibliographic research were examined through the songs found in ancient Tamil literatures. Songs containing the words 'Periyor' and 'Siriyor' were identified from seven types of literary texts from Tholkappiyam and Narunthogai. Analyzing the collected data descriptively, the semantics and characteristics of the 'Periyor' and 'Siriyor' people who perceive the ancient times and their characteristics have been presented as the findings of this study. 'Periyor' are the ones who are superior in morals, pride, virtues, good mind, character, education and fault tolerance. Lack of these characters are seen as 'Siriyor'.

**Keywords:** Periyor, Siriyor, Ancient Tamil Literature

## முன்னுரை

'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்பது பெயரியலின் முதல் நூற்பாவாகும். தமிழில் புழங்கும் அனைத்துச் சொல்லும் பொருள் குறிக்கும் வகையிலேயே அமைவதாகும். பொருள் குறிக்காது ஒருபோதும் அச்சொல் தோன்றாது என்பது தொல்காப்பியத்தின் கருத்தாகும். அதோடு, 'பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்; சொல்லின் ஆகும் என்மனார் புலவர்' இந்நூற்பாவானது பொருளுணர்த்தும் சொல்லையும் சொல்லுணர்த்தும் தன்மையையும் விளக்கும் இருவகைச் சொற்களை அறிமுகப்படுத்துகின்றது. சிறுவன் எனும் சொல்லானது இளைய வயதுடையவன் எனும் பொருளில் அமைதல் முதல் வகையாகும். அதனைத் தொடர்ந்து, ஆண்பால் எனும் சொல்லானது அந்தச் சிறுவனது பாலினத் தன்மையைக் குறிக்கும் சொல்லாக அமைவது இரண்டாம் வகையாகும். எனவே, எல்லாச் சொல்லும் பொருள் குறிப்பதோடு அதன் தன்மையையும் விளக்குகின்றது என்பது தெரியவருகின்றது. அதுபோல, நமது தமிழ்மொழிப் புழக்கத்தில் பன்னெடுங்காலமாக இருந்துவரும் சிறியோர் பெரியோர் எனும் சொற்களின் உண்மைப் பொருளையும் அதனை இலக்கியம் பண்டைக் காலம் தொடங்கி வரையறுத்த தன்மைகளையும் இக்கட்டுரை விளக்கவுள்ளது (தமிழண்ணல், 2009).

## பெரியோரும் சிறியோரும்

பண்டைத் தமிழ் இலக்கியம் தொடங்கிப் பெரியோர் சிறியோர் எனும் சொற்கள் நமது பயன்பாட்டில் இருந்து வருகின்றது. குறிப்பிட்ட சில பொருளை விளக்கப் பயன்படுத்தப்பட்ட சொற்கள் இக்காலத்தில் மக்களது தவறான பயன்பாட்டினால் பொருள் மாறிக் கிடக்கின்றன எனலாம். அக்கால இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்ட பெரியோர், பெரியவர் ஆகிய சொற்களையும் சிறியோர், சிறுவர் எனும் சொற்களையும் இக்காலத்தில் ஒரே பொருளைக் குறிக்கும் நோக்கில் பயன்படுத்துவதைக் காணலாம். இக்காலத்தில் சிறுவர் எனும் வயதில் இளைய குழுவினரைச் சிறியோர் என்றும் வயதில் மூத்த குழுவினரைப் பெரியோர், பெரியவர் என்றும் விளிக்கும் முறை புழங்கி வருவதைக் காணலாம். ஆனால், அக்காலத்தில் பயன்படுத்திய சிறியோர் எனும் சொல்லும் சிறுவர் எனும் சொல்லும் வெவ்வேறு பொருள் குறித்த சொற்களாகும் என்பது குறிப்பிடத்தக்கது. அகராதிகளை மேற்கோளாகக் கொண்டால், சிறுவன், சிறுமி, சிறுவர் ஆகிய சொற்கள் இளம் ஆண் அல்லது பெண், மகன் அல்லது மகள், இளைஞர் எனும் பொருளில் தோன்றுவதைக் காணலாம். சிறுவயதைக் கொண்ட குழுவினராகவே இச்சொல் வரையறுக்கப்பட்டுள்ளது (சோதிநாதன், 2017).

ஆனால், சிறியோர் எனும் சொல்லானது சிறுமை எனும் மையீற்றுப் பண்புப்பெயராகத் தோன்றிய தன்மையை விளக்குவதாகும். இச்சிறுமை எனும் சொல்லின் பல்பொருளானது, துன்பம், அற்பம், நுண்மை, வறுமை, இழிவு, குற்றம், கீழ்மை, கயமை, இளமை, குறை ஆகியவையாகக் காணலாம். இதில், பெரும்பாலான பொருள்கள் எதிர்மறையான பண்பையே உணர்த்தும் வகையில் இருப்பதைக் காண முடிகின்றது. அதோடு, இச்சிறுமை எனும் சொல்லின் எதிர்ச்சொல்லானது பெருமை ஆகும். பெருமை எனப்படுவது பொதுவாக நேர்மறையான தன்மையில் அமைவதைக் காணலாம். பெருகுதல், பெருமை, பெருக்கல் ஆகியவை நேர்மறையான பொருள்களை குறிப்பதாகும். ஆனால்,

சிறுத்தல், சிறுமை ஆகிய பொருள்கள் எதிர்மறைப் பொருள்களைக் குறிப்பதாகும். ஆக, பெருமை எனும் சொல்லை எதிர்ச்சொல்லாகக் கொண்ட சிறுமை எனப்படுவது எதிர்மறைக் கருத்தைப் பொதுவாக விளக்குகின்றது. ஆக, வயதில் குறைந்தவரை ஒருபோதும் எதிர்மறையாகக் குறிக்கும் மரபைத் தமிழ் கொண்டிருக்காது என்பது திண்ணம் (சோதிநாதன், 2017).

பெரியோர் அல்லது பெரியார் எனும் சொல்லானது பொதுவாக சிறந்தவர், ஞானியர், அரசர், அறிவுடையவர், உயர்ந்தவர் என்ற பொருளில் அமைந்தாலும் இக்காலத்தில் வயது மூத்தவர் என்ற பொருளிலும் வயதில் பெரியோர் என்ற கருத்தில் அமைகின்றது எனலாம். பெருமை தன்மையுடைய உயர்ந்தவராக இலக்கியங்களில் பாடப்படும் திறத்தால் இச்சொல் பலவிடங்களில் தோன்றியுள்ளதைக் காண முடிகின்றது. உயர்ந்தோர், முதன்மையுடையோர் எனும் பொருளில் இச்சொல் அமையப் பெற்றுள்ளதால் வயதில் மூத்தவரையும் இச்சொல்லைக் கொண்டு விளிக்கும் மரபு பின்பற்றப்பட்டு வந்தது. ஆனால், சிறுவர் அனைவரையும் சிறியோர் என அழைக்கவும் சிறியோருக்கான தன்மையில் அனைத்து இளையோரையும் வகைப்படுத்தும் தன்மையே சிறுவர்-சிறியோர் முரணாட்டத்திற்கான காரணமாக அமைந்தது எனலாம். இச்சொல் பெரியோர் எனும் சொல்லமைவில் தோன்றாததற்குக் காரணம் பெரியோர் என்பது எல்லா நிலைகளிலும் நேர்மறையான சூழலை குறிப்பதாகும். எனவே, இத்தகைய சிக்கல் இச்சொல்லாடலில் தோன்றவில்லை (சோதிநாதன், 2017).

### ஆய்வு நெறிமுறை

இவ்வாய்வானது பண்புசார் அணுகுமுறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வுக்கான தரவுகள் யாவும் நூலக ஆய்வு அணுகுமுறையில் எடுத்தாளப்பட்டுள்ளன. இந்த நூலக ஆய்விற்கு ஏற்ற நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள் போன்றவற்றைப் பயன்படுத்தி விளக்கமுறை அணுகுமுறையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வு முழுமையாக நூலக ஆய்வு அணுகுமுறையால் மேற்கொள்ளப்பட்டுள்ளதால், தேவைக்கான தரவுகளை முதலில் நூல்கள், ஆய்வுக் கட்டுரைகளின் வழி சேகரிக்கப்பட்டது. தொல்காப்பியம் தொடங்கி நறுந்தொகை வரை ஏழு வகையான இலக்கிய நூல்களிலிலிருந்து ஆய்வுக்கான தரவுகள் சேகரிக்கப்படும். பின் சேகரித்த தரவுகளை வாசித்து மதிப்பீடு செய்து, தேவையான தகவல்களை மட்டும் அடையாளங்கண்டு, பண்டைத் தமிழ் இலக்கியங்களில் காணப்படும் பெரியோர், சிறியோர் சொற்களைக் கண்டறிந்து விளக்கமுறை அடிப்படையில் அத்தரவுகள் பகுத்தாயப்பட்டு ஆய்வுக் கண்டுபிடிப்புப் படைக்கப்படும்.

## தரவுப் பகுப்பாய்வு

### தொல்காப்பியம் காட்டும் பெரியோரும் சிறியோரும்

பெரியோர் ஒழுக்கம் பெரிது எனக் கிளந்து
பெறு தகை இல்லாப் பிழைப்பினும் அவ் வழி
உறு தகை இல்லாப் புலவியுள் மூழ்கிய
கிழவோள்பால் நின்று கெடுத்தற்கண்ணும் (தொல். பொருள். கற்பு. 1096)

கற்பியலில் தோழியின் கூற்றாக அமைந்த இந்நூற்பாவில், 'பெரியோர் ஒழுக்கம்' எனும் சொற்றொடரானது தொல்காப்பியரால் அமைக்கப்பெற்றுள்ளது, தலைவியையும் அவர்களது புதல்வனையும் பிரிந்து பரத்தையிடத்தில் இருக்கும் தலைவனை மறைமுகமாகத் தாக்கும் இந்நூற்பாவில் வைத்த மனவுறுதியை மீறிய தலைமகனிடத்தில் ஒழுக்கத்தில் சிறந்தவரே பெரியோர் எனும் கூற்றைத் தொல்காப்பியர் வைக்கின்றார். ஆக, தொல்காப்பியம் கூறும் பெரியோரின் தன்மையானது ஒழுகலாறு முறையிலே ஒருவரிடத்தில் தோன்றும் என்பதாகும். அவ்வொழுகலாறு இல்லாதோர் சிறியோர் என்பது இதன்வழிப் புலப்படுகிறது (தமிழண்ணல், தொல்காப்பியம் - பொருளதிகாரம், 2010).

### புறநானூறு காட்டும் பெரியோரும் சிறியோரும்

முறை வழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியில் தெளிந்தனம் ஆகலின், மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே,
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே. (புறநானூறு 192)

கணியன் பூங்குன்றன் எழுதிய 'யாதும் ஊரே..' எனத்தொடங்கும் 'பெரியோரும் சிறியோரும்' பாடலின் இறுதி அடிகள் இவை. இவ்வடிகளில் கூறுவதாவது, தெப்பம் போல நம் உயிர் மிதந்தோடும் தன்மையைப் பிற திறம்பெற்றவர் வாழ்க்கையில் கண்டு தெரிந்துகொண்டதால், சிறப்புற்று விளங்கும் பெரியோரைக் கண்டு வியக்கமாட்டேன். அப்படி வியந்தாலும், சிறியோரை இகழவே மாட்டேன் என்பதாகும். நிலையாமை வாழ்க்கையை உணர்ந்த எவருக்கும் பெருமை நிறைந்த பெரியோரைக் கண்டு வியக்கவும் அதே வேளையில் பெருமை குறைந்த சிறியோரை இகழவும் மனம் இசையாது எனும் குறிப்புக் காணப்படுகிறது. பெரியோரைப் போற்றிச் சிறியோரைத் தூற்றும் செயல் கூடாது எனும் கருத்து இதன்வழி அறிய முடிகின்றது (கேசிகன், 2010).

**பதிற்றுப்பத்துக் காட்டும் பெரியோரும் சிறியோரும்**

உயிர் போற்றலையே, செருவத்தானே;
கொடை போற்றலையே, இரவலர் நடுவண்;
பெரியோர்ப் பேணி, சிறியோரை அளித்தி;
நின்வயிற் பிரிந்த நல் இசை கனவினும்
பிறர் நசை அறியாவயங்கு செந் நாவின் (பதிற்றுப்பத்து, பாடல் 79)

எட்டாம் பத்தாக, தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையைப் போற்றிப் பாடும் பதிகத்தில், 'பரிசிலை வேண்டி வரும் இரப்பவர்க்குக் கொடை செய்து பெரியோரைப் பேணிக் கொண்டு சிறியோரையும் புறக்கணிக்காமல் அருளுகின்றாய் என்ற அரிசில்கிழாரின் கூற்றினால் அம்மன்னன் போற்றப்படுகிறான். பல நற்குணங்கள் நிறைந்த சான்றோரைக் காப்பதோடு நின்றுவிடாமல் அக்குணங்கள் குறைந்த சிறியோரையும் அருள்தரும் நோக்கில் நடக்கிறான் என்பது நமது தமிழச் சமூகம் பெரியோரைப் பேணிக் காத்தாலும் சிறியோரையும் அருளோடு நோக்குவதைப் புலப்படுத்துகிறது (அருளம்பலவாணர், 2021).

**திருக்குறள் காட்டும் பெரியோரும் சிறியோரும்**

பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல். (குறள் 450)

சங்கக் காலம் கடந்து சங்கம் மருவிய காலத்தில் இயற்றிய திருக்குறளிலும் பெரியோர், சிறியோரது தன்மைகள் விளக்கப்பட்டுள்ளது. காட்டாக, இக்குறளில் நல்லவராகிய பெரியோரின் தொடர்பைக் கைவிடுதல் பலருடைய பகையைத் தேடிக் கொள்வதைக் காட்டிலும் பத்து மடங்கு தீமை உடையது எனும் கருத்தைக் காண முடியும். பெரியோராகப் பலராலும் போற்றப்படும் ஒருவரது தன்மையானது திருவள்ளுவரின் பார்வையில் நல்லாராக இருத்தல் வேண்டும் என்பதாகும். சிறியோர் எனப்படுவது இச்சூழலில் தீயோர் என எதிர்மறையாகக் கொள்ளலாம் (சிங்காரவேலு, 2014).

**மூதுரை காட்டும் பெரியோரும் சிறியோரும்**

மடல் பெரிது தாழை மகிழினிது கந்தம்
உடல் சிறியரென்றிருக்க வேண்டா – கடல்பெரிது
மண்ணீரும் ஆகாஅதனருகே சிற்றூரல்
உண்ணீரு மாகி விடும் (மூதுரை 12)

ஔவையாரது வாக்குண்டாம் எனப்படும் மூதுரையின் பொருளானது பெரியோரென்றும் சிறியோரென்றும் பகுக்கும் வேளையில் உருவிலோ அளவிலோ பெரியோரென வரையறுப்பது முக்கியமன்று; ஒருவரது பண்பே இதற்கு முக்கியம். ஆக, பெரியோர் சிறியோர் என வகைப்படுத்தும் முறை உருவத்தையும் அளவையும் அடிப்படையாகக் கொள்வது கூடாது என்பதாகும் (குமாரசாமி, 1988).

**ஆத்திசூடி காட்டும் பெரியோரும் சிறியோரும்**

பெரியாரைத் துணைக் கொள்

ஔவையின் இவ்வாத்திசூடியின் பொருளானது அறிவாற்றல் மிக்கோரைத் துணையாகக் கொண்டு வாழ வேண்டும் என்பதாகும். ஆக, ஔவையின் பார்வையில் பெரியார் அல்லது பெரியோர் என்பவர் கல்வியில் சிறந்தோர் எனும் தன்மையைப் பெற்றவர் எனத் தெரிய வருகின்றது (சாந்தி, 2006).

**நறுந்தொகை காட்டும் பெரியோரும் சிறியோரும்**

பெரியோர் எல்லாம் பெரியரும் அல்லர்
சிறியோர் எல்லாம் சிறியரும் அல்லர்

அதிவீரராமபாண்டியர் இயற்றிய வெற்றி வேட்கை எனும் நறுந்தொகையில் சில அடிகள் பெரியோர், சிறியோரது தன்மைகளைப் புலப்படுத்துகின்றன. முதலில் மேற்குறிப்பிட்ட அடியில் கூறுவதாவது, வயதில் மூத்தோர் எல்லாம் பெரியோருமல்லர்; வயதில் இளையோரெல்லாம் சிரியோரும் அல்லர் என்பதாகும். ஆக, பெரியோர், சிறியோரது தன்மைகளை இவர் விளக்கும் வேளையில்,

பெருமையும் சிறுமையுந் தான்தர வருமே. (30)

என்றும்

சிறியோர் பெரும்பிழை செய்தன ராயிற்

பெரியோ ரப்பிழை பொறுத்தலு மரிதே. (32)

என்றும் கூறுகிறார். அதாவது, ஒவ்வொரு மனிதரும் தன்னைப் பெரியோராகவும் சிறியோராகவும் தத்தம் செயல்களினாலேயே உருமாறுகின்றனர். அதோடு, சிறியோர் செய்யும் பெரும்பிழைகளைப் பொறுத்துக் கொள்வதே பெரியோரின் அரிய தன்மையென வரையறுக்கின்றார் அதிவீரராமபாண்டியர் (சோதிநாதன், 2013).

## நிறைவுரை

இளையர் இனமுறையர் என்றிகழார் நின்ற
ஒளியோடு ஒழுகப் படும். (குறள் 698)

வயதில் சிறியோர் என ஓர் அரசனை இகழ்வது கூடாது என்பதும் அவரது நிலைக்குக் கிடைத்த புகழை ஏற்றுப் பழக வேண்டும் என்பதும் வள்ளுவர் கூற்று. உருவையும் வயதளவையும் அடிப்படையாகக் கொண்டு ஒருவரைப் பெரியோர் என விளித்தல் கூடாது. பெரியோரெனப்படுபவர், ஒழுகலாற்றிலும் பெருமையிலும் நற்குணங்களிலும் நல்ல மனத்திலும் பண்பிலும் கல்வியிலும் பிழை பொறுக்கும் திறத்திலும் உயர்ந்திருப்பவர் மட்டுமே. இத்தகைய தன்மைகளில் சற்றும் குறைந்தோர் சிறியோராகக் காணப்படுகிறார். ஆக, வயதில் இளையோரைச் சிறியோர் என்றும் வயதில் மூத்தோரை மட்டுமே பெரியோர் என்றும் விளிப்பதை விடுத்துப் பல நற்றன்மைகளில் உயர்ந்தோரே காலம் போற்றும் பெரியோராகக் காணப்படுகிறார் என்பதை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

## துணைநூற்பட்டியல்


அருளம்பலவாணர், ச. (2021). பதிற்றுப்பத்து - ஆராய்ச்சியுரை. வடமாகாணம்: பண்பாட்டலுவல்கள் திணைக்களம்.

குமாரசாமி, ச. (1988). வாக்குண்டாம் மூலமும் உரையும். கொழும்பு: பூபாலசிங்கம் புத்தகசாலை.

கேசிகன், ப. (2012). தொல்காப்பியம் (எழுத்து - சொல் - பொருள்). (எ. கௌமாரீஸ்வரி, Ed.) சென்னை: சாரதா பதிப்பகம்.

கேசிகன். (2010). புறநானூறு மூலமும் உரையும். சென்னை: சாரதா பதிப்பகம்.

சாந்தி, ந. (2006). ஔவையார் அறிவுச் செல்வங்கள். கொழும்பு: இந்துசமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம்.

சிங்காரவேலு, ச. (2014). திருக்குறள் பொருளுரை. கோலாலம்பூர்: உமா பதிப்பகம்.

சோதிநாதன், ஆ. (2017). உமா நற்றமிழ்ப் பேரகராதி. கோலாலம்பூர்: உமா பதிப்பகம்.

சோதிநாதன். (2013). நறுந்தொகை - உரையுடன். கோலாலம்பூர்: உமா பதிப்பகம்.

தமிழண்ணல். (2009). தொல்காப்பியம். மதுரை: மீனாட்சி புத்தக நிலையம்.

தமிழண்ணல். (2010). தொல்காப்பியம் - பொருளதிகாரம் (தொகு. 2). மதுரை: மீனாட்சி புத்தக நிலையம்.

மனோன்மணி தேவி. (2019). தொல்காப்பியத் தேன் துமிகள். கோலாலம்பூர்: உமா பதிப்பகம்.